யும் இல்லை. இதில் மாவட்ட ஆட்சியாளர் அல்லது மாவட்ட சப்ளை ஆபிசர்ஸ் போன்றவர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாம். ரொம்ப கீழே இருப்பவர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை. அவர்கள் கொடுக்கின்ற விண்ணப்பங்களை உடனடியாக பரிசீலித்து அவர்களுக்கு கார்டு கொடுக்க ஏற்பாடுகள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. ஸ்ரீராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு இதைப்பற்றிப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

ஏழைக் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கல்.

*50—(*வினா எண். 5322)—திரு. இரா. தாமரைக்கனி :* மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கும் ஏழை குழந்தைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) முதலமைச்சர் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து ஏழைச் சிறுவர்களுக்கும் இலவச பாடப் புத்தகங்கள் (துணைப் பாடங்கள் நீங்கலாக) வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஏழை மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்குகின்ற திட்டத்திலே பரீட்சை முடிகின்ற வரையிலே புத்தகங்கள் வந்து சேருவதில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றன. அதை சீர்படுத்தி, உரிய நேரத்தில் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேர்வு நேரம் வரை புத்தகங்கள் வருவதில்லை என்பது சரியாக இருக்கமுடியாது. காலதாமதம் இருக்கின்றது என்றால் அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து ஏழைச் சிறுவர்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்க ஆணையிடப்பட்[illegible]து என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். [illegible] ழங்கப்படுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை எவ்[illegible] தற்காக அரசுக்கு ஆகி இருக்கும் செலவு எவ்வளவு என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை சுமார் 58,97,000 மாணவர்களுக்கு இலவசமாக நூல்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. 1985–86-ம் ஆண்டுக்கு, ரூ. 11,80,00,000 செலவழிக்கப்பட்டிருக்கின்றது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசக் கல்வி பத்தாம் வகுப்பு வரை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பாடப் புத்தகங்களை பத்தாம் வகுப்பு வரையில் இலவசமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த செயற் குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. பிறகு ஆராயப்படும்.

திரு. கே. சுப்பராயன் : தலைவர் அவர்களே, ஏழைக் குழந்தைகள் என்பதற்கு அரசு எந்த அடிப்படை வரையறையைக் கொண்டிருக்கிறது என்பதை அறிய அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச சத்துணவு மையங்களிலே உணவு கொள்கின்ற அனைவரும் ஏழைக் குழந்தைகள் என்ற அடிப்படையில், 58 இலட்சத்து 97 ஆயிரம் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திருவையாற்றில் இசைக் கல்லூரி.

51—(*வினா எண். 5693)—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் தியாகராஜ சுவாமிகள் நினைவாக ஓர் இசைக்கல்லூரி ஆரம்பிப்பதற்கென அரசிடம் ஏதேனும் கொள்கைக் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?